## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2018

----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதாளனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 259,964,609 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு இதுவரை மேற்கொள்ளப்படா திருந்ததுடன் இச்சொத்துக்கள் முழுவதையும் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு (Revaluation) திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 பின்பற்றப்பட வேண்டும் |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| **நிலையான சொத்துக்கள்** | 190,104,996 | 185,672,916 | 4,432,080 | வேறுபாட்டை ஏற்றுக்கொள்வதுடன் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

## 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கீட்டு உத்தியோகத்த ரொருவரால் பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த எல்லையை விஞ்சி 14 சந்தர்ப்பங்களில் ரூபா 3,485,093 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்த துடன் அதற்காக உரிய அங்கீகாரம் பெற்றப்பட்டிருக்க வில்லை. | பல்கலைக்கழகத்திற்கே உரித்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ரூபா 100,000 இனை விஞ்சி முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடிதம் 05/2015 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) செயல் நிமித்த உப கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கே வழங்க முடியுமான போதிலும் பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 252 சந்தர்ப்பங்களில் ரூபா 4,987,433 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | உரிய பிரிவுத்தலைவர்கள் / பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களின் கீழ் ஒரே தடவையில் விசேட செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அந்நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கு ஒரே தடவையில் முற்பணத்தை வழங்காமல் இருக்கவே பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. | அரச நிதிச் சுற்றறிக்கை 03/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடிதம் 05/2015 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் 2018 மார்ச் 07 ஆந் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பயிற்சி செயலமர்வொன்றிற்காக உத்தியோகத்தரொருவர் வெளிநாடுசென்று சென்றிருந்ததுடன் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய (11 நாட்களுக்கு முன்னர்) UWU/HR/PF/ 4/0001 ஆம் இலக்க பல்கலைக்கழக கடிதத்தின் மூலம் உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஊடாக சனாதிபதி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் மேற்படி விண்ணப்பத்தை கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று சனாதிபதி செயலாளருக்கு அனுப்புவதற்கு போதியளவு காலம் இல்லாமை காரணமாக சனாதிபதி செயலகத்திற்கு அனுப்ப முடியவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெளிநாடு செல்வதற்கு முன்னர் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதிய 18/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட சகல உததியோகத்தர்களும் வெளிநாடு செல்லும் போது கௌரவ அமைச்சரிடமிருந்து விடுமுறை அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதிலும் மூன்று உத்தியோகத்தர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதம மந்திரி அலுவலகத்தின் PMO/2/1/MICS/FL ஆம் இலக்கம் மற்றும் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதிய கடிதத்தின் உப விடயம் 01 இன் கீழ் குறிப்பிடப்பட்ட உப விடயங்கள் அர்த்தப்படுவதில் தவறொன்று காரணமாக கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2018 யூலை மாதம் முதல் நிறைவேற்று தரமல்லா தவர்களின் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக அமைச்சரின் அங்கீகாரத்திற்காக தொடர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**1.5.6 முறையான மதிப்பீடு அல்லது மதிப்பீடு செய்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நிமித்த கட்டுநிதி கொடுப்பனவின் போது அச்செயற்பாட்டிற்கு தேவையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை 223 சேமிப்பு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | தேவையான தொகைக்கு இணங்கும் மதிப்பீடொன்று தயாரிக்குமாறு பதவியணியினருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததுடன் எதிர்காலத்தில் சரியான மதிப்பீட்டின் பிரகாரம் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகளின் போது பயன்படுத்தப்பட்ட ஊவா மாகாண சபையின் கட்டிட கட்டண அட்டவணையில் (BSR) உள்ளங்கியுள்ள பொது அறிவுறுத்தல்களில் வேலை மேற்பார்வை மற்றும் வேலைத்தள பாதுகாப்பு போன்ற பொது மேந்தலை கிரயத்திற்கான 10 சதவீதம் ஒவ்வொரு விகிதத்திலும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் வேலை மேற்பார்வை மற்றும் பாதுகாப்பிற்காக வேரொரு கொடுப்பனவொன்று பல்கலைக்கழகம் தயாரித்த மதிப்பீட்டில் உள்ளடக்க முடியாது. எவ்வாறாயினும் தெரிவு அடிப்படையில் | கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்ட கலந்துரையாடலின் போது ஊவா மாகாண சபையின் கட்டிட கட்டணங்கள் அட்டவணை (BSR)தயாரிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவரின் கருத்தாவது: பொது மேந்தலை கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வை மற்றும் வேலைத்தள பாதுகாப்பு போன்றன சாதாரண நிலைமையின் கீழ் | ஊவா மாகாண சபையின் BSR விகிதங்களில் பொது மேந்தலை கிரயத்தில் மேற்பார்வை மற்றும் வேலைத்தள பாதுகாப்பு உள்ளடக்கப்பட்டுள்ளதால் அதற்காக வேறாக கொடுப்பனவொன்று உள்ளடக்க முடியாது. |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது போன்ற பிரகாரம் 03 நிர்மாணங்களுக்காக வேலை மேற்பார்வைக்காக ரூபா 155,250 தொகையும் வேலைத்தள பாதுகாப்பிற்காக ரூபா 247,250 என ரூபா 402,500 உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. போன்ற | குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக குறித்த செயற்திட்டத்தின் பொறியியலாளருக்கு தேவையாயின் பதிவேட்டிற்கு இணங்க உரிய செயற்பாட்டின் தன்மையின் பிரகாரம் விசேட பதவியணியினர் மற்றும் உருப்படிகள் ஏதேனும் உரிய காலப்பகுதிக்கரிய அளவீட்டுப்பத்திரத்திற்காக (BOQ)உள்ளடக்குவதற்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக்காண்பிக்கப்பட்டது. |

**1.5.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

| விடயம் | தொகை<br><br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 1984,409, 725 | • முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு.<br>• பொருள் மெய்மையாய்வு அறிக்கை | 2018 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அறிக்கையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 571 | பல்வேறு நிர்மாணங்கள், வழங்கல் மற்றும் சேவைகளை வழங்கும் போது நிறுத்தி வைத்தல்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேலைகளுக்கான 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 21,362,955 ஆன வைப்புகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக அரையாண்டு அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | நிர்மாணங்கள் தொடர்பான நிறுத்தி வைத்தல் தொகை இறுதி பட்டியல் தீர்வுசெய்யப்பட்டதன் பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்குரிய நிறுத்திவைத்தல் பணம் நிபந்தனை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்படும். அரையாண்டு அறிக்கை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 715(2) | பொருட் களஞ்சியத்தில் பொருட்கள் கிரமமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை. | கிரமமாக பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | | | |
| ------------------------------------- | | | |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தி | பல்கலைக்கழகத்தின் பிரதான தொழிற்பாட்டுத்துறை மேவுகை செய்யப்படும் வகையில் செயற்பாட்டுக் கைநூல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இறுதி தொழிற்பாடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை | | | |
| ------------------------------------ | | | |
| XX அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் லீவு என்பன உறுதி செய்யப்படாது சம்பளமும் படிகளுமாக ரூபா 354,565,436 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சம்பள பிரிவின் மூலம் குறித்த கல்வி துறை தலைவர்களின் கல்வி பதவியணியின் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தியதாக உறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு | 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு |

| | | | |
|---|---|---|---|
| | | சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்கான தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை<br>----------------------------------------- | | | |
| 2015 நவம்பர் 17 ஆந் திகதிய 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பரீட்சைப் பெறுபேறுகள், பரீட்சை முடிவடைந்து 03 மாதங் களுக்குள் வெளியிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நடை பெற்ற 14 பரீட்சைகள் என்பவற்றினது பெறுபேறு களை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | பரீட்சைப் பெறுபேறுகளை தாமதமின்றி வெளியிடுவதற்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS system) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>-------------------------------------------------- | | | |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 03 வாகனங்களால் செய்யப்பட்ட போக்குவரத்து சேவைகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான மாதாந்த குறிப்பொன்று பேணப்படாமல் இருந்ததுடன் எரிபொருள் தொடர்பான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பேரூந்துகளுக்குரிய மாதாந்த போக்குவரத்து சேவை குறிப்பொன்று நாளதுவரையாக்கப் பட்டுள்ளதுடன் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு மோட்டார் போக்குவரத்து பிரிவிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஊ) சனாதிபதி சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2012 யூன் 11 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதம் | வெளிநாட்டு விஜயங்களை மேற் கொண்டு நாட்டிற்கு வந்து 02 வாரங் களுக்குள் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிக்கைகள் வழங்கப்படாத விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோ கத்தர்களுக்கு உரிய அறிக்கையை வழங்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 371 செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 73 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,178,920 ஆன முற்பணங்கள் 01 மாத முதல் 04 மாதங்கள் வரையான கால தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன. | செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே கட்டுநிதியை தீர்வு செய்வதற்கு குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 168,999,621 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 85,587,906 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 83,411,715 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பல்கலைக்கழக வருமான சேகரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது (28) சதவீதம் முதல் 37 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது.

மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது (30) சதவீதம் முதல் 60 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதம் 1:1.39 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 1:1.88 ஆக இருந்தமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 0.49 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது அவ்வாறே முன்னனைய ஆண்டின் விரைவு விகதம் 1:2.04 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் போது 1:2.79 ஆக இருந்தமையால் 0.75 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 13 பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு 1,662 மாணவர்களை அனுமதிக்கப்பட வேண்டியிருந்த போதும், 1,439 மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 223 மாணவர்கள் குறைவாக அனுமதிக்கப்பட்டமையால் பல்கலைக்கழகம் முழு இயலளவையும் பயன்படுத்தத் தவறியிருந்தது. | பல்கலைக்கழகத்தினால் குறித்த வெற்றிடங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு அறிவூட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முழு மாணவர் அளவினையும் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தலின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகம் 11 ஆம் இடத்தில் காணப்பட்ட போதும் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி அளவில் அது 13 இடத்திற்கு வந்திருந்தது. | தரப்படுத்தலில் முன்னேறுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தரப்படுத்தலில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உயர்தரத்திலான சர்வதேச மட்டத்தில் பாடநெறிகளை குறைந்த கட்டணத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் வெளிநாட்டு மாணவர்களை அதிகரித்துக் கொள்வது பல்கலைக்கழகத்தின் நோக்கமாக இருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஒரு வெளிநாட்டு மாணவர் வீதம் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் எந்தவொரு மாணவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | உயர் கல்வி அமைச்சின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு தொடர்புபடுத்தும் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2005 பெப்ரவரி 10 ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்காக பல்கலைக்கழகத்துக்கென ஒதுக்கப்பட்ட கைத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான 30.9667 ஹெக்டேயர் காணி பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில் அமைச்சின் கீழான காணி பல்கலைக்கழகத்திற்கு கையேற்றல் 2009 ஆம் ஆண்டு முதல் தாமதமடைந்து காணி கைத்தொழில் அமைச்சிற்கு சட்டரீதியாக கையேற்கப்படாதிருந்தால் ஆகும். அதனால் இதுவரை பல்கலைக்கழகத்தினால் காணி அமைச்சிற்கு மேற்படி காணியை கையளிப்பதற்காக மீண்டும் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அக்காணியில் 06 கைத்தொழிலாளர்கள் தற்காலிகமாக குடியிருக்கின்றனர். அவர்களை இந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் உயர் கல்வி அமைச்சின் உரிய அதிகாரிகளுக்கு தொடர்ந்தும் வேண்டுகோள் விடப்பட்டதுடன் பின்னர் 2019.02.27 ஆந் திகதிய அமப/19/0379/110/20 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் கீழ் இழப்பீட்டுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அக்குழு வின் பரிந்துரையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகிறேன். | காணியை சட்டரீதியாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 13 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், சுயமாக நிதி வருமான மார்க்கங்களாக பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி அல்லது டிப்ளோமா பாடநெறிகளோ ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார முகாமைத்துவத்தில் வெளிவாரி பட்டப்பின்படிப்பு மற்றும் ஆங்கில மொழி டிப்ளோமா என்பன 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்ப வெளிவாரி பாடநெறி மற்றும் விஞ்ஞானமானி வெளிவாரி பட்டப்படிப்பு பாடநெறி என்பவற்றின் பாடப்பரப்பு மற்றும் முன்மொழிவுகள் அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டிற்காக சமர்பிக்கப்பட்டுளளது. கால்நடை மற்றும் தாவர உற்பத்தி தொடர்பான விஞ்ஞான வெளிவாரி பாடநெறியை ஆரம்பிப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெளிவாரி அல்லது டிப்ளோமா பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

---------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் விடுதி வசதிகள் அளிக்கப்பட்ட 1,019 மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 50 சதவீதமானோர் அல்லது 511 மாணவர்களுக்கு வாடகைக்கு பெறப்பட்ட விடுதிகளிலேயே வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே 2015 முதல் 2018 வரையான காலப்பகுதியில் இவ்வாறு வாடகை அடிப்படையில் மனைகளைப் பெற்றதற்கு ரூபா 44,221,235 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தினால் விடுதிகளை நிர்மாணிப்பதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் பதவியணியினருக்காக புதியவிடுதியொன்று நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் திட்டமிடல் தயாரித்தல் இடம்பெற்று வருகின்றது. | உத்தேச காணி கையேற்றல் செயற்பாடு துரிதமாக மேற்கொண்டு விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொருட்களைக் கொள்வனவு செய்கையில் தேவையையும் களஞ்சியத்தில் நிலவும் கையிருப்பு மட்டத்தையும் கவனத்திற் கொள்ளாமல் கீழே காட்டப்பட்டுள்ள பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br><br>(i) 2015 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 543,714 ஆன A3 வகை நிழற்பிரதி கடதாசிகளில் 591 பெக்கட் நிழற் பிரதிக்கடதாசிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 93,500 பெறுமதியான 170 அலகு சிஸ்டன் பிட்டிங் செட் ஹென்டல் டைப் (System Fitting Set Handle Type) பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | A3 வகையான நிழற்பட பிரதி கடதாசி பரீட்சை பிரிவின் பயன்பாட்டிற்காக எடுப்பதாக அறியத்தருகின்றேன்.. Handle type systems fitting வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் விடுதிகளின் திருத்த வேலைகளுக்காக தேவைப்படுவதாகவும் அவை சந்தையில் பற்றாக்குறை காணப்படுவதால் கூடுதலான அளவொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன | தேவைப்பாட்டை இனங்கண்டு காணப்படும் இருப்பு மட்டம் தொடர்பாக கருத்திற் கொண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 15,006 பெறுமதியான 23 இருப்பு விடயங்களுக்குரிய 634 பொருள் உருப்படிகளில் | இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை இருப்பு தொடர்பாக உரிய | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பற்றாக்குறையும் ரூபா 52,061 பெறுமதியான 31 இருப்பு விடயங்களுக்குரிய 222 பொருள் உருப்படிகள் மிகையாகவும் இருந்ததுடன் அவை தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்க எடுக்கப்படும் |

3.3 **நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா கைத்தொழில் கேந்திர நிதியம், உப வேந்தர் நிதியம், நலன்புரி நிதியம் எனும் நிதியங்களில் ரூபா 4,736,843 கூட்டுத் தொகை மீளாய்வாண்டில் எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் அந்நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஊவா கைத்தொழில் கேந்திர நிதியம், உப வேந்தர் நிதியம், நலன்புரி நிதியம் எனும் நிதியங்களில் பணம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படாமல் இருப்பதால் தொடர்ந்தும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் மூலம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் பொருளாதார செயற்திறன் தொடர்பாக வெளிக்கள ஆய்வு மற்றும் அரசின் பயிற்சி நிலையங்களின் செயற்திறன் தொடர்பான வெளிக்கள ஆய்விற்காக 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 591,250 தொகையில் ரூபா 397,290 பயன்படுத்தப்படடிருக்கவில்லை. | வெளிக்கள பரிசோதனை முடிவடைந்துள்ளதுடன் உரிய கொடுப்பனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியத்திற்குரிய குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் காலரீதியாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்த வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் போது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்திற்கு வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஊவா மாகாண சபையிடம் கிடைத்திருந்த ரூபா 100,000 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்குரிய ஊவா மாகாண சபையிடம் கிடைத்திருந்த ரூபா 100,000 ஐ செயற்திட்ட ஒருங்கிணைப்பாளரின் பரிந்துரை அடிப்படையில் மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்குரிய செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடனான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக்கழகத்தால் ரூபா 2,657,499 செலவிடப்பட்டு மாணவர்களது கற்கை நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நோக்கத்துடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 சக்கர உழவு இயந்திரம், 04 சக்கர உழவு இயந்திரம், கலப்பை மற்றும் துணைப்பாகங்கள் என்பன அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப பீடத்திற்காக தற்போது மாணவர் குழு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 4 ஆம் ஆண்டில் 1 மற்றும் 11 பகுதி நேர விடயப் பரப்பிற்குரிய BET in Mechanical Engineering பாடநெறி மொடியுல்களில் செய்முறை கற்கை செயற்பாடுகளுக்காக உரிய இயந்திர உபகரணங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உரிய இயந்திர பொருத்தும் பயன்பாடு தொடர்பாக பயன்படுத்தி மாணவர்களுக்காக செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.<br><br>அதற்கு மேலதிக பொதுவான நிர்வாகத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. | இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,240,300 பெறுமதியான பிரஷர் பிளேட் அபரேடர்ஸ் (Pressure Playte Apparatus) உபகரணம் குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உபகரணம் அதிக அழுத்தத்தின் கீழ் செயற்படுவதால் பாதுகாப்பாக உபகரணத்தை பயன்படுத்துவதற்காக நிரந்தரமாக அமைக்கப்பட்ட புறம்பாக இடமொன்று தேவைப்படுகின்றது அதற்காக இடமொன்று ஒதுக்கப் பட்டுள்ளதுடன், உபகரணங்கள் பல தடவை (trails) பயன்படுத்தப்பட்டுள்ளன. | மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வகையில் மாணவர் செயற்பாடு தொடர்பில் தொடர்புபடுத்த வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர் பதவிகளில் 05 வெற்றிடங்களும் விரிவுரையாளர்களுக்கான 36 வெற்றிடங்களும் நிரப்பப்படாதிருந்தன. | 2019 இரண்டாம் காலாண்டிலிருந்து நான்காம் காலாண்டு வரை எஞ்சிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | துரிதமாக கல்விசார் பதவியணியினர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணியில் 73 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | நிர்வாக மற்றும் நிறைவேற்று பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன.<br><br>34 கல்விசாரா வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 876 இன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கல்விசாரா பதவியணியினர், வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (i) | பல்கலைக்கழத்தின் நூலகர் பதவி பல்கலைக்கழக ஆரம்பந்தொட்டே வெற்றிடமாக இருந்து வரும் பதவி அதற்காக நூலகர் ஒருவரை நியமிக்காமல் 123 ஆம் நிர்வாக மன்றக் கூட்டத்தினது அங்கீகாரத்தின் பிரகாரம செபடிகல் விடுமுறையில் உள்ள ரஜரட்ட பல்கலைக்கழக நூலகர் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2018 யூலை 31 வரை நூலகராக நியமிக்கப்பட்டு 2019 சனவரி 25 ஆந் திகதி 139 ஆவது நிர்வாக சபையின் தீர்மானத்துக்கமைய, அவரின் பதவிக் காலத்தை 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. | நூலகர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிரந்தரமாக நூலகர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக் கழகத்தின் ஆரம்பம் முதலாக வெற்றிடமாக காணப்படும் பொறியியலாளர் பதவிக்கு தகைமையுடைய ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யாமல் அப்பதவிக்கு ஊவா மாகாண சபை கட்டிடத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் 2015 திசெம்பர் 02 ஆந் திகதி தொடக்கம் மாதாந்தம் ரூபா 50,000 படியைப் பெறும் அடிப்படையில் பகுதிநேர அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் குறித்த ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | நிரந்தரமாக பொறியியலாளர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. |
| (iii) | ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் 02 உழவு இயந்திரங்களையும் 2017 ஆம் ஆண்டின் போது 03 பஸ் வண்டிகளும் கொள்வனவு செய்திருந்த போதும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்த நிரந்தர சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பல்கலைக்கழக தொழில் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாளாந்தம் படி வழங்கப்படும் அடிப்படையில் நான்கு பேர் சாரதிகளாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | 2017 ஆம் ஆகஸ்ட் மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து 05 நிரந்தர சாரதிகளுக்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | சாரதிப் பதவிகளை அங்கீகரித்துக் கொண்டு நிரந்தர சாரதிகளை ஆட்சேர்ப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4 கணக்களி பொறுப்பும் நள்ளாலுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் முன்னைய இரண்டு ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று மேற்குறித்த கூட்டிணைந்த திட்டத்திலும் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதி பெறுமதிகள் குறிப்பிடப்படாமையால் வருடாந்த செயன் முன்னேற்றத்தை மதிப்பிக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம் வருடாந்தம் திருத்தத்திற்கு உட்படுவதுடன் அதன் அடிப்படையில் செயல் நடவடிக்கை திட்டமும் திருத்தத்துடன் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுவதுடன், கூட்டிணைந்த திட்டத்திலும் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்திலும் சகல உருப்படிகளுக்காக நிதிப்பெறுமதி உள்ளடக்க முடியாததுடன் இலக்குகளுக்காக நிதிப் பெறுமதிகளை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது திருத்திய பாதீட்டின் பிரகாரம் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட சுய நிதியிடல் நிகழ்ச்சித்திட்டங்களின் வருமானம் ரூபா 5,875,000, ஆக இருந்த போதும் உள்ளவாறான வருமானம் ரூபா 3,499,377 ஆக இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை சமூகமளிக்காமையால் உள்ளவாறான வருமானம் குறைவடைந்தது. | எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையினை பங்குபெறச் செய்து வளங்களை முழுமையாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் சுயநிதியிடல் நிகழ்ச்சித் திட்டங்களின் செலுத்தப்பட்ட ரூபா 2,278,443 ஆன செலவினம் மீண்டெழும் செலவின பாதீடு தயாரிக்கும் போது இனங்காணப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | திருத்திய பாதீட்டு நிதி ஏற்பாட்டின் பிரகாரம் ரூபா 650,000,000 ஆன மூலதனச் செலவினத்திற்காக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் உள்ளவாறான செலவினம் ரூபா 428,192,858 ஆக இருந்தமையால் ரூபா 221,807,142 சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பு மொத்த மூலதன நிதிஏற்பாட்டில் 34 சதவீதம் ஆக இருந்தது. அவ்வாறு 08 செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு 13 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | மாதாந்த நிதி ஏதிர்வு கூறல் அறிக்கையின் விண்ணப்பித்த மூலதன நிதி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கிடைக்காததன் காரணமாக மொத்த மூலதன செலவினங்களின் செயன் முன்னேற்றம் குறைவடைந்ததாக தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>ஆராய்ச்சிக்காக கட்டளைகளை சமர்ப்பிக்கப்படுகின்ற இரசாயன பொருட்கள் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களையும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வழங்குனரால் குறித்த பொருள் வழங்கப்படாமை<br><br>திட்டமிடப்பட்ட மற்றும் கிடைத்த மீண்டெழும் நிகழ்ச்சித் திட்டங்களை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்ய முடியாமை நடைமுறையின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நூலக கட்டிடம் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் கேள்வியை வழங்குவதற்கு முடியாதிருந்தது.<br><br>Quality Assurance தொழில்துறை வழிகாட்டல் மற்றும் முயற்சியாளர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்துரைக்கப்பட்ட | சரியாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கால எல்லைக்குள் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.<br><br>சொத்துக்களை கொள்வனவு செய்வதின் கீழ் உள்ளவாறான செலவினம் ரூபா 135,042,767 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் கொள்வனவு கட்டளை வழங்கப்பட்டு எனினும், வழங்குனர்கள் பொருட்களை வழங்காத கட்டளைகளின் பெறுமதி ரூபா 61,080,759 ஆகும் (Committed) அதன் பிரகாரம் நிதிஏற்பாடு சேமிப்பின் சதவீதம் 5% ஆகும்.<br><br>தொழில்நுட்ப விடயப்பரப்பிற்குரிய கட்டளையிடப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் எதிர்பார்க்கப்பட்ட நாட்களில் பல்கலைக்கழகத்திற்கு இல்லாத காரணத்தினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | |

**4.3 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் கடந்த 04 ஆண்டு கால நீர்ப் பாவனைக்கென ரூபா 19,695,753 தொகை செலவிடப்பட்டிருந்தது. வெளியேற்றும் கழிவு நீரை வாகனங்களைக் கழுவுவதற்கும் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தி நீருக்கான செலவினத்தைக் குறைப்பது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சுத்திகரிப்பு முறைமை மூலம் அகற்றப்படும் நீர், மழை நீர், ஊற்று நீர் என்பவற்றை பயன்படுத்துவதற்காக தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை மூலம் பெற்றுக் கொள்ளும் நீரை முகாமைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் செயற்படுத்தப்படும் Alternative Water Supply முறைமையின் கீழ் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. | சுத்திகரிக்கப்படும் நீரை முறையான முகாமைத்துவத்துடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிலுருத்தி ''நிகழ்ச்சி நிரல்'' 2030 இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைவதற்கு தயார்படுத்துவது தொடர்பாக அறிந்திருந்தும் பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன.<br><br>(i) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்காணல்<br><br>(ii) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை மதிப்பீடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காணல் | பல்கலைக்கழகத்தினால் குறித்துரைக்கப்பட்ட நிலை பேறான அபிவிருத்தி இலக்கை வடிவமைக்கப்படாத போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 04, 05, 06 மற்றும் 09 ஆகிய இலக்குகளை மேவுகை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்காணப்பட வேண்டும். அவற்றை மதிப்பிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். |